நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 2

தொகுதி: 114

திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்

விலை: ரூ.20

பிப்ரவரி - 2020

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் - பேராசிரியர் இரா. சதாசிவம் 4
2. சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா 7
   - முதுமுனைவர் இரா. இளங்குமரனார்
3. பக்தி இயக்கத்தின் மூலவேர்கள்
   - பேராசிரியர் ப. மருதநாயகம் 9
4. அரசவாகை - துறையமைதி ஓர் ஆய்வுப் பார்வை
   - பேரா. முனைவர் இ.கி. இராமசாமி 17
5. தமிழ் இயக்கத்தின் தலைவன் மொழிச் சங்கங்கள்
   - பேராசிரியர் செ.வை. சண்முகம் 23
6. சங்கச் செய்திகள் 41

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள்கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

பேராசிரியர் செ.வை.சண்முகனார் ஆய்வுநெறி நின்று **மொழிச்சங்கங்கள்** என்ற தலைப்பில் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவரின் அறிவுப் புலத்தை விளக்குகிறார். பாண்டித்துரைத்தேவர் குறித்த பல்வேறு செய்திகள் திறம்பட ஆய்வுகள் செய்யப்படவில்லை. அதனால் தமிழ் கூறும் நல்லுலகம் தமிழர், தமிழ், தமிழ்நாடு என்னும் தமிழர்நாகரீகம், தமிழ்மொழி, தமிழ்நாட்டுப்பொருளாதாரம் என்னும் பல துறைகளிலும் வளர்ச்சி குன்றிய அறிவாண்மையற்ற மக்கட்சமுதாயமாக சிதைந்து போன நிலையை ஆசிரியர் விளக்கும் திறமும், நுட்பமும் மீண்டும் மீண்டும் ஆய்வு நெறி நின்று ஆராய்ந்து உண்மை காண்பதற்குரியதாகும். கட்டுரை செறிவும் உண்மையின் ஆழமும் நிறைந்துள்ளது. தமிழ் அறிஞர்களும் புரவலர்களும் மீண்டும் மறுமலர்ச்சி என்னும் குறிக்கோள் நிறைவேறச்சிந்தனையில் கொள்ளவேண்டிய செய்திகளை வளர்ச்சியற்ற சமுதாயத்தில் முற்போக்குச் சிந்தனையாளர்கள் தோல்வியுற்ற ஆற்றாமையையும் பாண்டித்துரைத்தேவரின் அருமைப்பாட்டையும் கட்டுரை விளக்குகிறது. பேராசிரியர் செ.வை.சண்முகனார் அன்பிற்கும் பாசத்திற்கும் போற்றுதலுக்கும் உரிய பெருந்தகையாவார்.

குறுந்தொகையில் 267ஆம் பாடல் **கால் எறி கடிகையார்** பாடியதாகும். அதனை **முதுமுனைவர் இரா.இளங்குமரனார்** விளக்கும் நயம் சங்ககாலம் தொடங்கி இன்று வரை மக்களின் வாழ்க்கைச்சிக்கலை முன்வைப்பதாகும். பொருளும் இன்பமும் இவ்வுலக வாழ்க்கையின் இன்றியமையாத இரு திறப்பட்டவை. பொருளின்றி இவ்வுலகம் இல்லை; அது போல மனைமாட்சி இல்லாயின் எனைமாட்சிதாயினும் இவ்வுலகம் சிறப்படையாது. இரண்டையும் போற்றுவது ஆளுமையாகும்.

கரும்பின் அடிப்பகுதி போன்றது காதல். அதுவும் பொருளால் மேம்படுவது. இளமையில் பொருள் ஈட்டச்செல்வது இளமையின் இன்பப்பகுதியை புறக்கணித்து புறப்பொருளைத் தேடுவதாகும். எனவே அகமா புறமா என்ற கேள்வியை முன்வைத்த சங்கப்புலவர் **கால் எறி கடிகையார்** நிலையாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை கடை என்பதால் அன்பே போற்றுதற்குரியது என்றார். இளமை போயின் காதல் சிறப்புறுவதில்லை. இளமையில் துணையைப்பிரிந்து கடல் கடந்த நாடுகளில் இன்றும் பொருள் நிமித்தமாக **"கோல் அமை குறுங்தொடி குறுமகள் ஒழிய ஆள்வினை ஆயினும் பிரிவது சிறப்பல்ல"** என்னும் கருத்து ஆழ்ந்த பொருளுடையதாகும்.

அரசவாகை - துறையமைதி - ஓர் ஆய்வுப்பார்வை: பேராசிரியர் இ.கி.இராமசாமி. சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானைத் தாமல்பல் கண்ணனார் பாடிய பாடல் அரசவாகைத்துறையுள் புறநானூற்றில் 43ஆம் பாடலாக இடம்பெறுகிறது. கட்டுரை ஆசிரியர் அரசருக்குரிய ஐந்து பொறுப்புகளும் அரச கட்டிலைத் துறந்த நிலையும் எப்படி அரச வாகையாகும் என்ற ஐய வினாவை எழுப்பி ஆய்வுரையை நிறைவு செய்திருப்பது ஆய்வு நெறியை மாணவர்கள் கற்கும் திறப்பாட்டை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. புறநானூறு **உரையாசிரியர் ஔவை சு. துரைச்சாமிப்புலவர் "இது பொறுத்தற்கரிய பிழையைப்பொறுத்த குணவென்றி யான் அரச வாகையாயிற்று என்றும் அவரவர் தகுதிப்பாட்டை மிகுதிப்படுத்துவது வாகைத்திணையாதலால் பொறைமிக்க குணத்தை அரசவாகையில் அடக்கிக் கூறினார்"** என்னும் விளக்கம் எண்ணுதற்குரியது.

பக்தி இயக்கத்தின் மூலவேர்கள்: பேராசிரியர் ப. மருதநாயகம்.

"பண்ணத்தி" என்னும் "தொல்காப்பியத' தொடரை விளக்கும் நயமும் அதனை மணிவாசகர் மரபு அறிந்து பண்சுமந்த பாடல்" எனப் போற்றுகிறார் என்ற செய்தியும், இசை ஆசிரியன் புதிதாகப் படைப்பது திறம் என்றும் ஆசிரியர் எடுத்துரைக்கும் நுட்பம் கற்று மனம் கொள்ளத்தக்கது. பழைய தொல்காப்பியத் தொடர்கள் பரிபாடல், சிலப்பதிகாரம், திருவாசகம் போன்ற நூலாசிரியர்களுடைய தொடர்களில் புதைந்துள்ள செய்தி கற்று இன்புறத்தக்கது. இசைத்தமிழ்க் குறியீடுகளாக அகத்துறைச் சொற்கள் பாலை, குறிஞ்சி, மருதம், நெய்தல், கைக்கிளை போன்றவை எண்ணிப்பார்க்கத்தக்கன.

முத்தமிழும் விரவிய பக்தி இலக்கியம் விரிந்து பரந்து நாடகமாக, இசையாக இயலாகப் பரவி வழக்கிலும், இலக்கியத்திலும் மக்கள் இலக்கியமாகத் திகழ்ந்ததைப் பேராசிரியர் ப.மருதநாயகம் எடுத்துரைப்பதும் அதனோடு போட்டியிட சமசுகிருத மொழிக்கு எவ்விதத் தகுதியும் இல்லை என்பதை தெளிவுபட விளக்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்காலத்தில் வடமொழியைத் தூக்கிப்பிடித்து கோயில் வளாகங்களை வலிந்து பற்றி நிற்கும் புரோகிதர் வரலாற்றையும் ஆசிரியர் தம்கூற்றாக இல்லாமல் வைணவ ஆச்சாரியார்களின் மணிப்பிரவாள இலக்கியங்களை மேற்கோள்காட்டி எடுத்துரைப்பதும் ஈண்டு எண்ணவேண்டிய கடப்பாடு கோயிலைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றஅரசு மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டிய செய்தியாகும்.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

9. கால் எறி கடிகையார்

முதுமுனைவர். **இரா. இளங்குமரனார்**

குறுந்தொகை 267-ஆம் பாடலில், 'கரும்பின் கால் எறிகடிகை' என்றோர் அரிய தொடர் வருகிறது. அத்தொடரின் முற்சொல்லை விலக்கி, பின்னே ஆர் சேர்த்துக் கூறிய பெயர், **'கால் எறி கடிகையார்'** என்பதாகும்.

கரும்பின் கால்- கரும்பின் அடிப்பகுதி; எறி - வெட்டுதல்; கடிகை - வெட்டப் பட்ட துண்டு; கரும்பின் அடிப்பகுதி முதிர்வும், திரட்சியும், சாறு மிகையும், சுவையும் ஒருங்கமைந்ததாகலின் அவ்வடிப்பகுதியைக் கடித்துச் சாற்றை அருந்தும் சுவை பெரிதாம். மேலே செல்லச்செல்ல மென்மையும் சாறு அளவும் சுவையும் குறையும். நுனிப்பகுதி பழுப்பு எனத் தள்ளவும் படும்.

நல்ல நட்பு நுனியில் இருந்து கரும்புதின்றது போன்றது என்றும், அல்ல நட்பு அடியில் இருந்து கரும்பு தின்பது போன்றது என்றும் நாலடியார் கூறும். (138)

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்

என்பது திருக்குறள் (1121). இக்குறுந்தொகை கரும்பின் அடித்துண்டுச் சாற்றுக்கு உவமை காட்டுகிறது.

பாலும் தேனும் இயற்கைக் கொடை போலவே, கரும்புச்சாறும் இயற்கைக் கொடையே என அறியலாம்.

தலைவன், தலைவியைப் பிரிந்து சென்று பொருள் தேட வேண்டும். அப்பொருள் கொண்டு அறம்பல செய்தல் வேண்டும். அதற்குப் பொருள் இல்லாமல் தீராது. முன்னவர்களும் அம்முறையே கொண்டனர். யானும் அது செய்வேன் என நினைந்தான்.

அவன் நெஞ்சில் ஓர் ஒளிக்கீற்று உண்டாயது. பொருள் வேண்டுவதே! அறமும் வேண்டுவதே; அவ்விரண்டையும் எப்பொழுதும் தேடிக்கொள்ளலாம். ஆனால், இந்த இளமையில் கொள்ள வேண்டும் இன்பத்தைப் பின்னர் அடைய முடியுமா? நாம்

வாழும் நாள் நம் கையிலேயா உள்ளது? எப்பொழுது கூற்றம் வரும்? எப்பொழுது கொண்டு போகும்? அறிந்தார் எவர்?

உலகச் செல்வம் எல்லாம் ஒருங்கே கிடைப்பதாயினும் அடிக்கரும்புத் துண்டின் சாறுபோலும் இனிய எயிற்றில் இருந்து ஊறிய நீரையுடைய என்னவளின் இன்பத்தைப் பெறுவதை விட்டுப் பிரிந்து செல்லேன் எனச் செல்லாமை மேற்கொண்டான். அக்கருத்தே இப்பாடலாகக் கிளர்ந்தது.

இருங்கண் ஞாலத்து தீண்டுபயப் பெருவளம்
ஒருங்குடன் இயைவ தாயினும், **கரும்பின்**
கால்எறி கடிகைக் கண்அயின் றன்ன
வால்எயிறு ஊறிய வசையில் தீநீர்க்
கோல்அமை குறுந்தொடிக் குறுமகள் ஒழிய
ஆள்வினை மருங்கில் பிரியார் நாளும்
உறன்முறை மரபில் கூற்றத்து
அறனில் கோள்நற் கறிந்திசி னோரே

என்பது அது.

'மேனின்றும் ஆடவர் பொருட்குப் பிரிந்தார் ஆகலின் நாமும் பொருட்குப் பிரிதும்' என்னும் நெஞ்சிற்கு நாளது சின்மையும் இளமையது அருமையும் கூறிச் செலவழுங்கியது என்பது கூற்றுவகை.

அரும்பொருள்;

இருங்கண் ஞாலம் - பேரிடம் அமைந்த உலகம்; பயம்-பயன்; அயிலல் - கடித்துத்தின்னல்; பருகல். வால்-தூய; எயிறு - பல்லின்அடி; வசை-பழி; தீ-இனிய கோல் - அழகு; தொடி-வளையல்; ஒழிய - விட்டு நீங்க; உறன்முறை மரபு - வழிவழியாகக் கொண்ட வழக்கம்; கோள்- (உயிரைக்) கொள்ளுதல்; நற்கு - நன்கு; அறிந்திசினோர் அறிந்தோர்.

ஒப்பு நோக்கு

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே (பட்டினப்பாலை 218-220)

பக்தி இயக்கத்தின் மூலவேர்கள்

பேரா. ப.மருதநாயகம்,
ஆய்வறிஞர் (ஓய்வு),
நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை -600113.
9442787727

சென்ற இதழின் தொடர்ச்சி.....

பக்தி இலக்கியங்களிலிருந்து வள்ளலாரும் பாரதியும் இம்மரபைப் பெற்றனர். ஆண்டாளின் திருப்பாவை அசாமிய பக்தி இலக்கியத்தில் தன் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அசாமிய மொழியில் கண்ணனைப் பள்ளியெழுப்பும் பாடல்கள் ஆண்டாளின் திருப்பாவையை அடியொற்றிச் செல்லும்:

> கமலாவின் காதலனே, உன் காலைத் துயிலை நீக்குவாய்; உன் நிலவு போன்ற முகத்தை நான் பார்க்க வழி செய்வாய்; இரவு சென்று மறைந்து விட்டது; நான்கு திக்குகளும் தெளிவாய் உள்ளன; கதிரவனின் ஒளிக்கற்றைகள் இரவுத் திரையைக் கிழித்தெறிந்து தோற்றம் தருகின்றன. நூறு இதழ்கள் கொண்ட தாமரைகள் மலர்ந்து இருக்கக் கருவண்டுகள் அவற்றை வட்டமிடுகின்றன. பிரஜாவின் இடையர் குலக் கன்னிகள் உன் புகழைப் பாடிக் கொண்டே தயிர்க் கடைகின்றனர். தாமனும் சுதாமனும் உன்னை அழைக்கின்றனர். பலராமனும் படுக்கையறையிலிருந்து வெளியே வந்து விட்டதைப் பார். நந்தன் மாட்டுத் தொழுவத்திற்குக் கிளம்பிவிட்டான். இடையர்கள் பசுக்களை நாடிச் சென்று விட்டனர். கோபாலா துயிலெழுந்து பசுக்களைக் கூட்டிச் செல்வாய். உன்னுடைய

புல்லாங்குழலையும் கோலையும் வெண்ணெய், பால் பானைகளையும் எடுத்துக்கொண்டு கன்றுகளையும் கதறும் பசுக்களையும் கட்டவிழ்த்து விடுவாய். மாதவன் சொல்கிறான்: அன்னை யசோதையே, மூன்று உலகங்களுக்கும் நாயகனை மாடு மேய்க்கும் பையனாய்ப் பெற நீ என்ன தவம் செய்தாய்?

தூது இலக்கிய மரபு தொடர்வதை ஆழ்வார் பாடல்களில் பார்க்கலாம். பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனிடம் தூது செல்லுமாறு அன்னச் சேவலை வேண்டுகிறார். நற்றிணையில் மூன்று கவிதைகளில் தலைவியர் அ∴றிணைப் பொருள்களைத் தூது அனுப்புவர். அகநானூற்றில் ஒரு பாடலில் தலைமகள் தன் காதலனுக்கு நண்டைத் தூதாக அனுப்புகிறாள்.

கானலும் கழறாது கழியும் கூறாது
தேன்இமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது பிறிதுயாதும் இலனே.(அகம்.170)

ஆண்டாள், நாச்சியார் திருமொழியில் குயில் பத்தில் குயிலைத் தூதனுப்புகிறார். வலம்புரிச் சங்கோடு பேசுகிறார்; மேகத்தைத் தூது அனுப்புகிறார். காந்தள் மலரிடத்தும், கோவைக் கொடி, முல்லைக் கொடி, குயில்கள், மயில்கள், மழை, கடல் ஆகியவற்றிடமும் தம் துயரைத் தெரிவிக்கிறார். இறுதிப்பகுதியிலே, "கண்ணனைக் கண்டீர்களா, கண்ணனைக் கண்டீர்களா" என்ற கேள்வியும், அதற்குக் கண்டோர் சொல்லும் விடையுமாகப் பத்துப் பாடல்கள் வருகின்றன.

தூது இலக்கியம் வடமொழியில் காளிதாசனில் தொடங்கி மலையாளம் போன்ற மொழிகளுக்குள்ளும் ஊடுருவியது.

இவ்வாறு பல இலக்கிய வகைகளும் உத்திகளும் சங்க இலக்கியங்களிலிருந்து பெறப்பட்டு வளர்க்கப்பெற்றன. பின்னால் திருத்தக்க தேவர், கம்பர் போன்ற காப்பியப் புலவர்களும் இம்மரபைப் பெரிதும் பேணினர். இடையில் சில நூற்றாண்டுகள் மறைந்திருந்து இருபதாம் நூற்றாண்டில் புத்துயிர் பெற்றுத் தம் செல்வாக்கை அவை

மீண்டும் நிலை நாட்டின. இனிவரும் புலவர்களும் அவற்றின் தாக்கத்திலிருந்து தப்ப இயலாது. இன்றையத்தமிழ்க் கவிஞர்களும் பிற இலக்கியப் படைப்பாளர்களும் எட்டுத்தொகைக்கும் பத்துப்பாட்டிற்கும் மீண்டும் செல்வதே அறிவுடைமை ஆகும் என்று ஜார்ஜ் "ஈர்ட் கூறும் அறிவுரை பொருள் பொதிந்ததாகும்.

பக்திப்பாடல்கள் அத்வைதம், விசிட்டாத்வைதம் போன்ற இறையியல் கோட்பாடுகள் உருவாதற்கு மூலமாய் அமைந்தது போல் வேறுசில நல்ல விளைவுகளையும் உண்டாக்கின. தமிழிசையின் தொடர்ந்த வளர்ச்சிக்குப் பக்தி இயக்கத்தின் பங்களிப்பு மிகப் பெரியது. இறைவனே ஏழிசையாய், இசைப்பயனாய் விளங்குகிறான் என்றும், "ஊழிமுடிவில் எம்இறை நல் வீணை வாசிக்குமே" என்றும்,

"தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" என்றும்,

தமிழின் நீர்மை பேசித் தாளம் வீணை பண்ணி நல்ல

முழவ மொந்தை மல்கு பாடல் செய்கையிடம் ஓவார்

என்றும் அடியவர்கள் பாடினர்.இசைத்தமிழும் பக்தி இயக்கத்திற்குச் சங்க மரபிலிருந்து கிடைத்ததேயாகும்.

இசைத்தமிழ், தொல்காப்பியக் காலத்துக்கு முன்பே தோன்றியது. பண்ணை நாடி நிற்கின்ற, நத்துகின்ற பாடலைப் பண்ணத்தி என்பர் தொல்காப்பியர். இதனையே "பண் சுமந்த பாடல்" என்று திருவாசகம் கூறும். சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையில் வரும் வாரம் என்ற குறியீடு தொல்காப்பியத்தின் வழிவந்தது. சங்க இலக்கியத்தில் செவ்வழி, படுமலை, நைவளம், விளரி, கிளை, உழை, பாலை, பண், திறம், மூவேழ் துறை முதலான இசைத் தமிழ்ச் சொற்களை நிரம்பக் காண்கிறோம். "பண் கண்டு திறன் எய்தாப்பண்" என்ற பரிபாடலின் ஓரடியே போதும் இசைத்தமிழின் அடிப்படையை உணர்வதற்கு.

எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும் (அகம். 352)

என்பதனால் திறம் என்பது புதிது புதிதாக வரும் கிளைப் பண் என்ற தன்மை வெளிப்படை.

யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா (புறம். 92)

என்ற ஔவையார் பாடலால் இசைத்தமிழ் யாழடிப்படையும், பொழுதுக்கேற்ற பண்ணும், விளங்கிய பொருளும் அமைந்தது என்ற முத்தன்மை தெளிவாகும். பாலை, குறிஞ்சி, மருதம், நெய்தல், கைக்கிளை முதலான அகத்துறைச் சொற்கள் இசைத்தமிழ்க் குறியீடுகளாக வருவதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அங்ஙனம் பார்ப்பின் "முல்லை சான்ற முல்லையம் புறவு", "மருதம் சான்ற மருதத் தண்பணை" என்ற சிறுபாணாற்றுப்படைக்கு, "முல்லைப்பண் நிறைந்த"; "மருதப்பண் நிறைந்த" என்று பொருள் கொள்ளவும் இடனுண்டு.

இசைத்தமிழின் அசைக்கவியலா ஓர் அடித்தளம் யாழாகும். ஆகுபெயரால் இதனை 'நரம்பு' என்று கூறுவது மரபு. "யாழின் பகுதி எனவும்" "இசையொடு சிவணிய நரம்பின் மறைய" எனவும் தொல்காப்பியம் கூறுகிறது. "நிறை நரம்பிற்றே பண், குறை நரம்பிற்றே திறம்" என்பது நிகண்டு. "பண் யாழ் மறப்ப", "பண் யாழ் நிறுமின்", "பண்ணமை நரம்பின் பச்சையாழ்" எனவரும் சங்கத் தொடர்கள் மேற்கருத்துச் சான்றுகளாம். "யாழோர் மருதம் பண்ண" "சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி" என்பதனால் யாழிற் பண் வாசித்தலைப் "பண்ணி" என வினைபடவும் ஆளக் காண்கிறோம். (வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியத்திறன், பக்.96,97)

வ.சுப.மாணிக்கனாரின் கூற்றுப்படி, இசைத் தமிழ் தொல்காப்பியத்திற்கு முன்னரே தோற்றம் பெற்று, சங்க காலத்தே பெருவளர்ச்சி பெற்றதாயினும் பக்தி இயக்கத்தின் போதுதான் நாயன்மார்களும் ஆழ்வார்களும் அதனை உச்சநிலைக்கு ஏற்றினர்.

பக்தி இயக்கத்தின் போது தமிழ் வழிபாட்டு மொழி என்ற அளவில் வடமொழிக்கு மேலானதாகப் பேணப்பட்டதற்கும் பல சான்றுகளைக் காண்கிறோம். நம்மாழ்வார் இறைவனை எல்லாமாகக் காண்கிறார்.

மூவுலகங்களுமாய், அல்லனாய், உகப்பாய், முனிவாய்,
பூவில்வாழ் மகளாய், தவ்வையாய், புகழாய், பழியாய்,
தேவர் மேவித்தொழும் திருவிண்ணகர் சேர்ந்தபிரான்
பாவியேன் மனத்தே உறைகின்ற பரஞ்சுடரே (3478)

என்றெல்லாம் வாழ்த்தி, இன்கவிபாடும் ஆற்றலைத் தமக்கு அளித்து, இறைவன் இனிய தமிழ்ப்பாசுரங்களைப் பெற்றுக் கொண்டேன் என்று பாடுவார்.

.. .. .. என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை
இன் தமிழ் பாடிய ஈசனை, ஆதியாய்
நின்ற என் சோதியை என் சொல்லி நிற்பனோ? (3649)
என்சொல்லால் யான்சொன்ன இன்கவி என்பித்து
தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன் (3650)
என்னால் தன்னை
வைகுந்தன் ஆகப்புகழ வண் திம் கவி
செய்குந்தன் தன்னை எந்நாள் சிந்தித்து ஆர்வனோ?(3655)
ஏர்விலா என்னைத் தன்னாக்கி என்னால் தன்னைச்
சீர்பெற இன்கவி சொன்ன திறத்துக்கே? (3656)
மறப்பிலா என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை
உறப்பல இன்கவி சொன்ன உதவிக்கே? (3657)

நம்மாழ்வார், தாம் பாடிய தமிழ்ப்பாடல்களை இறைவனால் அவனைப்பற்றிப் பாடிக்கொண்ட பாடல்களாகப் பார்க்கிறார். தன்னை இறைவனோடு முற்றுமாக இணைத்துக் கொள்கிறார். இதனால் நம்மாழ்வார் இறைவனையே தமிழாகப் பார்க்கிறார் என்று எடுத்துரைப்பார், ஏ.கே.ராமானுஜன்:

To Nammazhvar, god is not a hieratic second language, a Sanskrit to be learned, to be minded lest one forgets its rules, paradigms and exceptions; he is one's own mother tongue. In his view god lives inside as a mother tongue does and we live in god as we live in language – a language that was there before us, is all

around us in the community, and will be there after us. To lose this first language is to lose one's beginnings, to be exiled into aphasia .. ..

Thus the early poet – saints required and created a poetry and a poetics of the mother tongue. Their self – image did not permit the poetry or poetics of a learned courtly tradition, a scriptural or decorous language apart from oneself, an art that one masters and elaborates with care and anxiety, and never with any complete confidence. Unlike the mother tongue, Sanskrit is the language of the fathers. (Hymns for the Drowning pp. 137-8)

(நம்மாழ்வாரைப் பொறுத்தமட்டில் இறைவன் மதகுருமார்களுக்கு உரிய இரண்டாம் மொழி அல்லன்; கட்டுப்பாடுகளையும், விலக்குகளையும், முன்மாதிரி அமைப்புகளையும் கற்று மனப்பாடம் செய்ய வேண்டிய சமஸ்கிருத மொழி அல்லன்; அவன் ஒவ்வொருவருக்கும் அவரது தாய்மொழி ஆவான். நம்மாழ்வார் பார்வையில் இறைவன் நம்முள்ளே தாய்மொழியைப் போன்று வாழ்கின்றான். நாம் நம் தாய்மொழியில் வாழ்வதைப் போல் அவனிடத்து வாழ்கிறோம். அம்மொழியானது நமக்கு முன்பிருந்தது; நம் சமுதாயத்தில் நம்மைச் சுற்றியிருப்பது, நாம் மறைந்த பிறகும் அது வாழும். இத்தகைய முதல் மொழியை இழப்பதென்பது ஒருவருடைய தொடக்கத்தை, ஒழுகலாறுகளை இழப்பது போலாம்; மூளைக் கோளாறினால் ஏற்படும் பேச்சிழப்பிற்குத் தள்ளப்படுவது போலாம்.... இவ்வாறு நம்முடைய முன்னோர்களாகிய கவிமுனிவர்கள் தேவை கருதி ஒரு தாய்மொழிக் கவிதையையும் கவிதை இயலையும் படைத்தனர். அவர்களின் உள்முக நோக்கு வலிதில் கற்க வேண்டிய அரசவை மரபுக்குரிய கவிதை இயலையோ, ஆடம்பரமான, தன்னிடமிருந்து பிரிந்து நிற்கும் மொழியையோ ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை; கவனமாகவும் கவலையோடும் கற்றறிந்து விவரிக்க வேண்டிய கலை. தன்னம்பிக்கையோடு கற்க முடியாத கலை அவர்களுக்கு வேண்டாததாயிற்று. தாய்மொழியைப் போலல்லாது சமஸ்கிருதம் தந்தைகளின் மொழியாகும்).

ஏ.கே.ராமானுஜன் சொல்வதுபோல் அரசவை மரபு மட்டுமே கொண்ட சமஸ்கிருதம் ஒருவருக்கு அந்நியப்பட்ட மொழியாகி விட, அரசவை மரபும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் பேச்சு மரபும் கொண்ட தமிழ் தாய்மொழியாகவும், தந்தை மொழியாகவும் ஒருசேரச் செயல்பட்டது.

அன்னார் குறிப்பிடுவது போல், வழிபாட்டு மொழியாக, இறைவனிடம் கொண்ட அன்பை வெளிப்படுத்தும் மொழியாக, இறைவனுடைய அருள்வேண்டும் மொழியாக, தமிழ், சமஸ்கிருதம், ஆகிய இரண்டின் நிறை குறைகள் பற்றி முடிவற்ற விவாதம் நடந்தது. "வைணவ ஆச்சாரியார்களின் மணிப்பிரவாள இலக்கியங்கள்" (The Manipravala Literatures of the Srivaisnava Acharyas, 12th to 15th century) எனும் நூல் குறிப்பிடும் நிகழ்ச்சி இங்கு நாம் கருத வேண்டிய ஒன்றாகும்.

ராமானுஜருடைய சீடரான வெங்கிபுரத்து நம்பியென்பார் இடைக்குல ஆய்ச்சியர் பெண்களிடையே நின்று கொண்டு திருமாலைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். ஓர் இடையன் அவரை அணுகி, "நீங்கள் ஏன் வைணவ பக்தர்களை விட்டுவிட்டு இக்கல்வியறிவில்லாப் பெண்கள் இடையே நின்று கொண்டிருக்கிறீர்", என்று கேட்டான். அதற்கு அவர், "தண்ணீர், மேட்டிலிருந்து பள்ளத்தில் பாய்வதுபோல், இறைவனின் அருள் கல்வியறிவில்லா இவ்விடையர்கள் மேல் பாய்கிறது" என்று விடையிறுத்தார். அடியவன் "அவர்கள் எவ்வாறு இறைவனை வழிபட்டார்கள்? தாங்கள் எவ்வாறு வழிபட்டீர்கள்?" என்று வினவினான். நம்பி "அவர்கள் தூய தமிழில் இறைவனை வேண்டினார்கள். அருள்கூர்ந்து இந்தப் பாலைக்குடி, இப்பழத்தைச் சாப்பிடு, இப்பட்டு மேலாடையை அணிந்து கொள்; நூறாண்டுகள் வாழ்வாயாக", என்றெல்லாம் பேசினார்கள், நான் சமஸ்கிருதத்தில் "வெற்றி அடைவாயாக, வெற்றி அடைவாயாக" என்று இறைவனை வாழ்த்தினேன். அடியவன், "கடூர ஒலிகொண்ட சமஸ்கிருதத்தை இடையர் இடையே இருக்கும்போதும் உம்மால் மறக்கமுடியவில்லை; நாம் எங்கிருந்தாலும் ஒரே மாதிரியாக நம்மைப் போலவேதான் இருப்போம் போலும்" என்று சொன்னான்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவப்பிரகாச சுவாமிகள் மணிவாசகரின் திருவாசகம் போல் சமஸ்கிருத வேதங்கள் யாவரையும் உருக்கவல்லவை அல்ல என்று சொல்லியுள்ள பாடலை நாம்அறிவோம். ஆனால் அவருக்கு முற்பட்ட இடைக்காலத்திலேயே ஒரு வைணவ உரையாசிரியர், "திருவாய்மொழியை யாவரும் படிக்க முடியும்; அது யார் தொட்டாலும் கெடாத பொன் பாத்திரமாகும். சமஸ்கிருதமோ பலரால் தொடப்பட்டால் கெட்டுப்போகும் களிமண் பாத்திரமாகும்; என்பார். வழிபாட்டுத் தகுதி எம்மொழிக்கு உண்டு என்ற பேச்சு இடைக்காலத்தில் அல்லாமல் சங்கம் மருவிய காலத்திலேயே எழுந்திருக்கவேண்டும். திருக்குறளைப் போற்றி எழுதப் பெற்ற திருவள்ளுவ மாலையில் மூன்று நான்கு பாடல்கள் அதனை வடமொழி வேதங்களுக்கு ஒப்பிட்டுப்பேசுகின்றன. கோதமனார் எழுதியதாகச் சொல்லப்படும் கவிதை,

ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத்து ஏட்டின் புறத்தெழுதார் - ஏட்டெழுதி
வல்லுநரும் அல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று (15)

(அந்தணர்கள் நான்கு மறைகளையும் வாய்ப்பாடமாகச் சொல்லுவாரேயன்றி அவற்றின் வலிமை குறையுமென்று ஏட்டில் எழுதமாட்டார்கள்; வள்ளுவரது திருக்குறளை ஏட்டில் எழுதி ஆற்றல் உடையவரும் அல்லாரும் ஓதினாலும் அதன் ஆற்றல் குறையாது) என்று வெளிப்படையாகவே குறள் வேதத்தினும் உயர்ந்ததென்று கூறும்.

சங்க இலக்கிய மரபு பக்தி இலக்கியத்தில் தன் செல்வாக்கை நிலை நிறுத்தியதோடு பக்தி இயக்கத்தின் வழியாக இசைத்தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் வழிபாட்டு மொழியாகச் சிறப்புறுதற்கும் வழி செய்தது என்பதை ஆழ்வார், நாயன்மார் பாடல்களை ஆழ்ந்து கற்பார் அறிய முடியும்.

அரசவாகை - துறையமைதி ஓர் ஆய்வுப் பார்வை

பேரா. முனைவர் இ.கி. இராமசாமி (ப.நி)
மேனாள் தலைவர் - தமிழ் உயராய்வு மையம்
யாதவர் கல்லூரி, மதுரை - 14.
அலைபேசி: 98420 08954.

1.1.விளக்கம்

புறநானூற்றுப் பாட்டுக்களுக்குத் திணைகளும் துறைகளும் வகுத்துக் காட்டியவர்கள் அவற்றைத் தொகுத்தோராவர். துறையிறந்துபோன பாட்டுக்கள்போக எழுபத்தெட்டு துறைகளையுடைய பாடல்களைப் பார்க்க முடிகின்றது. அவற்றுள் அரசவாகை முதன்மை பெறுகின்றது.

அரசவாகை என்பது ஒரு புறத்திணைத்துறை. அரசனது இயல்பைக் கூறுதல் என்பது பொதுப்பொருள். அரசனது வெற்றியைக் கூறுதல் என்பது சிறப்புப்பொருள். இருவகையான விளக்கங்களையும் உரையாசிரியர்கள் சொல்லிச் சென்றுள்ளனர். பாடாண்திணையுள் இடம் பெற்ற "அடுத்தூர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்து" (1036) என்ற துறைக்குப் பகைவரை வென்றவனைப் புகழ்ந்து, அவனுடைய நல்லியல்புகளைப் பகரும் இயன்மொழி வாழ்த்து என்பது பொருள். எனவே இயன்மொழி வாழ்த்தையும் அரச வாகையினையும் ஒருங்கே வைத்தும் எண்ணலாம்.

1.2.அரசர்பக்கம்

வாகைத் திணையுள் வரும் வாகை வகைகளில் "ஐவகை மரபின் அரசர் பக்கம்" என்பதற்குக் கற்றல், வேட்டல், ஈதல், படை வழங்கிப் பயிற்றுவித்தல், குடியோம்புதல் ஆகிய ஐந்தும் அரசனுக்குரிய பணிகளாம் என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது, மேலும் அரசனுடைய வெற்றியைக் கொண்டாடும் விழாக்களுள் ஒன்றாக **அரசுக் கட்டிலைத் துறந்த வாகையும்** சுட்டப்பட்டுள்ளது (தொல்.1022). ஐந்து பொறுப்புக்களும் அரசுக் கட்டிலைத் துறந்த நிலையும் எப்படி அரச வாகையாகும் என்ற ஐயம் எழுகின்றது.

1.3.அரசவாகை - துறைப் பகுப்பு

புறநானூற்றுக்குத் துறை வகுத்தவர்கள் புறப்பொருள் வெண்பாமாலையினை அடிப்படையாக வைத்து வகுத்தனர் என்று முடிவு கண்டுள்ளனர். அதன்படி புறநானூற்றுப் பாட்டு எண்கள் 19-23, 25, 26, 31, 33, 37, 42-44, 51-54, 61, 66, 76-79, 81, 82, 93, 94, 98-100, 104, 125, 167, 168, 174 ஆகியவற்றுக்கு அரசவாகைத் துறையை வகுத்துக் காட்டியுள்ளனர். இந்தப் பாட்டுக்களுள் அரசனுடைய வெற்றி மற்றும் வெற்றி தொடர்பான செய்திகள் இடம் பெறுவதோடு அரசனுடைய பிற பண்புநலன்களும் இன்றியமையாத இடம் பெற்றுள்ளன.

1.4.கொளு-அடிக்குறிப்பு

சங்கப் புறப்பாட்டுக்களுக்குக் **கொளு** என்ற அடிக்குறிப்பை எழுதிக்காட்டி அப்பாட்டுக்கள் தோன்றிய பின்னணியைக் குறிப்பிட்டுள்ளனர். அந்தக் கொளு இல்லையானால் பாட்டை எளிதில் புரிந்து கொள்ள இயலாது. அப்படிக் கொளு குறிப்பிடும்போது இன்னார் மகனாகிய இன்னாரைப் பற்றிப் பாடப்பெற்றது; இன்னார் பாடியது என்று சுருக்க முகவரி கொடுப்பது வழக்கம்.

(எ-டு) **பாடியோர்**

அண்டர் மகன் குறுவழுதி,

பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்,

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

பாடப்பட்டோர்

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன்.

சோழநாட்டுப் பிடவூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன்.

பாரி மகளிர் (இவர்கள் கபிலரால் பாடப் பெற்றவர்கள்)

மலையமான் மக்கள் (கிள்ளி வளவன் யானையை விட்டுக் கொல்ல முயன்ற போது கோவூர்கிழார் பாடியது)

1.5.கொளுவில் புதுமுறை

கொளுவில் இன்னாரின் அண்ணன் இன்னார் என்றோ, இன்னாரின் தம்பி இன்னார் என்றோ குறிக்கும் மரபு இல்லை. ஆனால் புறநானூற்றின் 43-ஆம் பாடலுக்குக் கொளு எழுதியவர்கள் சோழன் **நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான்** என்று குறித்துள்ளனர். மாவளத்தானும் புலவர் தாமப்பல் கண்ணனும் வட்டு விளையாட்டு ஆடியபோது அந்தப் புலவர் பாடியது என்றும் குறிப்பிட்டுள்ளனர். இது கொளு எழுதியதில் புகுத்திய மாற்றம் எனத்தகும். புதுமுறை என்றாலும் ஏற்புடையதே.

1.6. கொளுவும் பாட்டுப்பொருளும்

அந்தப் பாட்டின் செய்தியும் வித்தியாசமானது: அரசனாகிய மாவளத்தானும் புலவராகிய தாமப்பல் கண்ணனும் வட்டு விளையாடினர். அது சூதாட்டமன்று. மகிழ்ச்சி தரும் பொழுதுபோக்கு விளையாட்டு. தோற்கும் நிலையிலிருந்த புலவர் வட்டுக்காயைக் கையினால் மறைத்துக் கொண்டார். அவரது செயலைக் கண்ட அரசன் தன் கையிலிருந்து ஒரு வட்டுக்காயை அவர் மீது விட்டெறிந்தான். அதனைக் கண்டு சினந்த புலவர், அரசனின் பிறப்பின் மீதே தான் ஐயப்படுவதாக வெறுப்பு மொழிகளை உமிழ்ந்தார். முதலில் புலவர் தாம் செய்த பிழையினை உணரவில்லை எனத் தெரிகின்றது. வெறுக்கத்தக்க மொழிகளை வீசிய புலவர்மீது சினங்கொள்ளாமல் வெட்கப்பட்டு அரசன் அமைதியாக இருந்தான். அரசன் நினைத்திருந்தால் அக்கணமே புலவரைச் சிரச்சேதம் செய்திருக்க முடியும்; அல்லது தூக்கிலிட்டிருக்க முடியும்; அல்லது சிறையிலடைத்திருக்க முடியும்; அல்லது அரண்மனையை விட்டு வெளியேற்றியிருக்கமுடியும். அப்படியெல்லாம் கடிது ஓச்சாமல் அரசன் அமைதி காத்தான்; சினத்தை வென்றான். தமது பிழையை உணர்ந்த புலவர், அரசனுடைய பொறுமையையும் பெருந்தன்மையையும் பண்புமேம்பாட்டையும் பாடினார். அரசனுடைய பொறுமை, தம்மை வென்றுவிட்டதாக நெகிழ்ந்து பாடினார். அது அரசவாகையாக மலர்ந்தது.

1.7. துறையமைதி

மாவளத்தானுக்கு இது போரினால் கிடைத்த வெற்றியன்று. முதலில் பிழை செய்தவர் புலவர்தான். எதிர் வினையாகத்தான் அரசன் பிழை செய்தான். இரண்டாவதாக உன் பிறப்பில் ஐயப்படுகிறேன் என்று சுடுமொழியை வீசிய புலவரின் செயல் பெரும்பிழை ஆகும். அதற்கு அரசன் எதிர்வினையாக எதுவும் செய்யாமல் நாணி அமைதி காத்தான். அரசன் தம் பொறுமையால் புலவரை வென்றான். அதனால் பாட்டுக்கு வகுக்கப்பட்ட அரசவாகைத் துறை சாலப் பொருந்துவதாயிற்று. துறை வகுத்தவர்கள் வல்லாண்மை மிக்கவர்கள்; நுண்மாண் நுழை புலன் மிக்கவர்கள். பாடியவருக்கும் பாடப்பட்டவருக்கும் உரிய சிறப்புக்களில் கொளு எழுதியவருக்கும் பங்கு உண்டு என்னும் உண்மை இதனால் விளங்கும்.

1.8 மூலம்

"நிலமிசை வாழ்நர் அலமரல் தீர
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கி
கால்உண வாக, சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும் மருள, கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித்து, ஒரீஇ,
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக
நேரார்க் கடந்த முரண்மிகு திருவின்
தேர்வண் கிள்ளி தம்பி வார்கோல்
கொடுமர மறவர் பெரும கடுமான்
கைவண் தோன்றல் ஐயம் உடையேன்
ஆர்புனை தெரியல்நின் முன்னோர் எல்லாம்
பார்பார் நோவன செய்யலர்ளு மற்றிது

நீர்த்தோ நினக்கு? என வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும்
நீபிழைத்தாய் போல நனி நாணினையே;
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணும்என
காண்தகு மொய்ம்ப காட்டினை; ஆகலின்
யானே பிழைத்தனென்; சிறக்க நின் ஆயுள்
மிக்குவரும் இன்நீர்க் காவிரி
எக்கர் இட்ட மணலினும் பலவே" (புறநா.43)

1.9.முகத்துதி

சோழன் நலங்கிள்ளியின் பரம்பரையில் வந்தோர் பார்பாருக்கு மனம் நோகும்படி எதையும் செய்ததில்லை என்றமையால் பாடிய புலவர் மேல்வருணத்தைச் சாரந்தவர் என்பது தெளிவாகின்றது. அந்தணருக்கும் அரசருக்கும் மோதல் வந்தால் அரசரே அடங்கிப் போய்விடுவார் என்ற மனுதர்ம நியதியும் இதில் எதிரொலிக்கிறது. தாமல் (தாமப்பல் என்பதன் திரிபு) என்ற ஊர் காஞ்சிபுரத்தின் பக்கத்தில் உள்ளது. கண்ணனார் ஓர் அந்தணர்; அரசரோடு நெருங்கிய பழக்கமுடையவர் என்ற குறிப்பைத் தருகின்றார் உ.வே.சாமிநாதையர் (புறநானூறு மூலமும் உரையும், 6ஆம் பதிப்பு, 1963,ப.45).

சுட்டெரிக்கும் கதிரவனின் வெப்பத்தைத் தாங்கிக்கொண்டு காற்றையே உணவாகக் கொண்டு வாழ்ந்த முனிவர்கள், புறாவைக் காப்பாற்றத் தம்மையே தந்த சிபிப் பேரரசனின் கருணையைக் கண்டு மருண்டனராம். கருணையே வடிவான சிபி மன்னன் வழிவந்தோன் மாவளத்தான் என்று முகத்துதி செய்து அரசனை நெகிழ வைத்தது ஒருவகையான உளவியல் உத்தி என்று சொன்னால் மறுக்க முடியாது.

1.9.1 பாட்டில் இல்லை

பாட்டினுள் புலவர் வட்டுக்காயை மறைத்த பிழை சொல்லப்படவில்லை. அரசன் என்ன பிழை செய்தான் என்றும் சொல்லப்படவில்லை. இருவரும் என்ன விளையாடினார்கள் என்றும் சொல்லப்படவில்லை. ஆனால் புலவர், "கைவண் தோன்றல் ஐயம் உடையேன்" என்று வெறுக்கத்தக்க சொற்களைச் சொன்னார் என்ற தகவலைப் புலவரே தெளிவாகப் பதிவு செய்துள்ளார். "தம்மைப் பிழைத்தோர் பொறுக்கும் செம்மல்" என்று அரசனுடைய பண்புநலனைக் குறித்துள்ளார்.

1.9.2. நிறைவாக

தமிழர் விளையாட்டுக்களில் ஒன்றாகிய வட்டாடல் உருண்டை வடிவிலான காய்களை உருட்டி விளையாடுவது. அது குறித்த தகவல்கள் பிற இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

கையாடு வட்டில் (அகநா.108:17);

வண்ணநீர் கரந்த வட்டுவிட்டு எறிவோரும்
(பரிபா.11:55);

பூஎழில் வண்ணநீர் பூரித்த வட்டு (பரிபா.12:68);

அரங்கின்றி வட்டு ஆடியற்றே நிரம்பிய

நூல்இன்றிக் கோட்டி கொளல் (குறள்:401).

இவ்வாறு வட்டாடல் பற்றி வரும் தகவல்கள் இரண்டு வகையான வட்டாடல் இருந்ததைக் காட்டுகின்றன. ஒன்று வண்ணப் பொடியும் நீருங்கொண்டு விளையாடுவது; மற்றொன்று வட்டுக் காய்களை நகர்த்தியும் உருட்டியும் விளையாடுவது. எப்படியோ விளையாட்டு வினையாகி விட்டது. புலவர் தம் குற்றத்தை உணர்ந்து வருந்தினார். அரசன் சினம் காத்துப் புலவரை வெற்றி கொண்டான். இது மாவளத்தானுக்குப் போரினால் கிட்டிய வெற்றியல்ல; பண்பாட்டினால் கிடைத்த வெற்றி. பாட்டு, அரசவாகைத் துறையமைதி பெற்று மேலும் சிறக்கின்றது.

தமிழ் இயக்கத்தின் தலைவன் மொழிச்சங்கங்கள்

பேரா. செ.வை.சண்முகம்,
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்,
கைபேசி: 98651 96476.

முன்னுரை

இந்தியாவில் பவுத்தமதம் சங்கத்தை அதன் மூன்று மதிப்பு மிக்க பொருள்களில் (புத்தம் ;அறிவு'. தன்மம் 'அறம்', சங்கம்) ஒன்றாகவே கருதியது. தமிழகத்திலும் இடைக்காலத்தில் புத்தமத செல்வாக்கினால் சங்க மரபுகளை பவுராணிகமாக உருவாக்கி, தமிழின் மிகப்பழைய இலக்கியங்களைச் சங்கத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியம் என்ற கருத்தில் சங்க இலக்கியம் என்று அழைக்கும் மரபு தோன்றிவிட்டது. ஆனாலும் பதினேழாம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட மேலைநாட்டுத் தாக்கத்தால், மேலையாக்கத்தால் (Westernisation), பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதலில் வங்காளத்திலும், பிறகு இந்தியாவின் பிறபகுதிகளிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் சமூக சீர்திருத்தச் சங்கங்கள், சமய மறுமலர்ச்சிச் சங்கங்கள், கல்விக் கழகங்கள், அரசியல் சங்கங்கள் என்ற முறையில் பல சங்கங்கள் தோன்றின. இவை சமூக விழிப்புணர்வின் வெளிப்பாடுகள். இந்த முறையில் உண்டான மொழிச்சங்கங்களின் சிறப்புத்தன்மை பற்றியும், குறிப்பாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்பு, அமைப்பாளர்கள் யார் - எவர், செயல்பட்டமுறை ஆகியவைகள் பற்றியும் அறிந்து கொள்வதன் மூலம் மொழிச்சங்கங்கள் மொழியை எப்படி வளர்த்தன; மொழியை எப்படிக் கருதின; மொழியை எப்படிப் பயன்படுத்தின என்ற உண்மைகளை விளக்க இங்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

சங்கங்கள் உருவாகக் காரணமான அரசியல் சமூக பண்பாட்டுப் பின்னணி, சங்கத்தின் தோற்றம், சங்கத்தின் அமைப்பு,

அமைப்பாளர்கள், செயல்பாடு, மதிப்பீடு ஆகியவை இங்கு விளக்கப்படும்.

அரசியல் சமூகப் பண்பாட்டுப் பின்னணி

பல ஐரோப்பிய நாட்டு வாணிகக் குழுவினர்கள் 18, 19 ஆம் நூற்றாண்டிலே இந்தியாவிற்கு வந்து ஓரளவு அரசாட்சியையும் நிறுவினார்கள். அந்த முறையில் 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியாரின் வசம் இந்தியாவின் பெரும் பகுதியும் வந்து விட்டது. 1858-ஆம் ஆண்டு முதல் ஆங்கில அரசர் நேரடி பார்வைக்கு மாற்றப்பட்டு ஆங்கில அரசு இந்தியாவை ஆண்டு வந்தது, என்றாலும் 19-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இந்திய சமூகம் மேலை நாட்டு ஆதிக்கத்திற்கு உட்பட்டது. அவைகளுள் மொழித்தொடர்பாக கீழ்க்கண்ட மாற்றங்கள் சிறப்பானவை.

1. கல்வி நிறுவனமயமாக்கப்பட்டது.
2. அச்சு இயந்திரம் அறிமுகமாகி அச்சிட அனுமதிக்கப்பட்டதால் உரைநடை வளர்ந்து இலக்கியத் தகுதி பெற்றது.

தமிழைப்பொறுத்த வரையில் தமிழின் முழு இலக்கியப்பரப்பும் தெரியவந்தது. (வேங்கடசாமி, 1962). இதனால் மொழி விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, மொழித் தனித்தன்மையும் புரிய ஆரம்பித்தது. இது சமூக விழிப்புணர்வின் அங்கமாகவும், வெளிப்பாடாகவும் அமைந்தது. இதனால் பலவகையான சங்கங்கள் இந்தியாவெங்கும் ஏற்படுத்தப்பட்டன.

இந்தச்சங்கங்கள் வங்காளத்தில் பிரமசமாஜம் (1828), இளைய வங்காளம் (1831) போன்றவையும், பம்பாயில் பிரார்த்தனை சமாஜமும் (1867), புனாவில் சதயஹோிதக் சமாஜமும் (1873) ஏற்படுத்தப்பட்டன. தமிழகத்தில் இராமலிங்க அடிகள் சமரசசன்மார்க்க சபையும், சென்னை நேட்டிவ் அசோசியேஷன் (1852) முதலியனவும் தோன்றின. மொழிச்சங்கங்களாக 5-3-1889ல் திராவிட பாஷா சங்கமும், ஏப்ரல் 1890-இல் தென்னாட்டுத் தமிழ்ச்சங்கமும் குறிப்பிடத்தகுந்தவை. வடஇந்தியாவில் 1893-இல் நாசஷி பிரச்சாரசபை ஹிந்தி மொழிக்காக உண்டானது.

தமிழகத்தைப் பொருத்தவரையிலான 19-ஆம் நூற்றாண்டு அரசியல் நிலையும், சமூக நிலையும் குறிப்பிடத்தகுந்தது. அரசியல் நிலையில் இன்றைய தமிழ்நாடு சென்னை மாகாணம் என்ற பெயருடன் பெரும் பகுதி ஆந்திரா, பெரும் பகுதி தமிழ்நாடு, சிறுபகுதி கர்நாடகம், சிறு பகுதி கேரளம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. சமூக நிலையில் பிராமணர் - பிராமணர் அல்லாதார் உணர்வு ஆங்கிலப் பாதிரியார்களாலும் பழந்தமிழ் வெளியீட்டாலும், அரசியல் செல்வாக்கு அடிப்படையாலும் ஏற்பட்டது. அரசியல், சமூக வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் இன்று பலராலும் ஆராயப்பட்டுள்ளன. ஆனால் மொழிச்சங்களின் வளர்ச்சி, சமூக, பண்பாட்டு மொழியியல் நோக்கில் இதுவரை ஆராயப்படாததால் அந்த முயற்சி இங்கு மேற்கொள்ளப்படுகிறது. எனவே 19-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் உருவாக்கப்பட்ட மொழிச்சங்கங்களும் 20-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச்சங்கமும் விரிவாக ஆராயப்படுவதன் மூலம் மொழிச்சங்கங்கள் ஆற்றும் மொழிப்பணி, அதன் பின்னுள்ள சமூக உணர்வு ஆகியவை விளக்கப்படும்.

தமிழ்ச்சங்க உருவாக்கப் பின்னணி

5-3-1889 அன்று திராவிட பாஷா சங்கம் சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. அது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளை வளர்ப்பதற்காக அமைக்கப்பட்டது. ஆங்கிலக் கலைச்சொற்களை மொழிபெயர்த்து நான்கு திராவிட மொழிகளில் மட்டும் அச்சிட்டு வெளியிட்டது. இதற்குப் பிறகு வேறு பணிகளில் அது ஈடுபட்டதாகத் தெரியவில்லை (சூரியநாராயண சாஸ்திரி, 1903 : 144)

1890-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தென்னாட்டுத் தமிழ்ச்சங்கத்தின் செயல்குழு பற்றியும், அதன் நோக்கங்கள் பற்றியும் செய்திகள் கிடைக்கின்றன. (இரா.இளங்குமரன், 1982;142). சோமசுந்தரம் செட்டியார் - தலைவர்; டி. பாலசுந்தரமுதலியார் - செயலர்; பூண்டிஅரங்கநாத முதலியார் -பி.வி.விசயரங்க முதலியார், சேஷகிரி சாஸ்திரியார், சி.வை. தாமோதரம்பிள்ளை, இராமசாமி

முதலியார், எம். வீரராகவாச்சாரியார் - உறுப்பினர்கள். இவர்களில் பிராமணர் - இருவர்; முதலியார் - நால்வர்; பிள்ளை - ஒருவர்; செட்டியார் - ஒருவர்; இதில் பலரும் தமிழ் அறிஞர்கள் ஆவார். இவர்கள் 1-5-1890 அன்று காஸ்மாபாலிடன் கிளப்பில் கூடி நோக்கங்களை வரையறுத்தார்கள் அவையாவன:

1. நூலகம் நிறுவி இதுவரை தமிழில் வெளியான நூல்களைச் சேகரிப்பது.
2. ஓலைச் சுவடிகளைச் சேகரிப்பது.
3. தமிழில் எழுதப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட பொது மக்களுக்குப் பயன்படும் உரைநடை அறிவியல் நூல்களை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்வது.
4. வெளியான நூல்களின் பட்டியல், நூலின் பொருளடக்கம், நூல் கிடைக்கும் விபரங்களைத் தொகுப்பது.
5. பல துறைகளில் சொற்பொழிவு ஏற்பாடு செய்வது.
6. ஏட்டுப்பிரதிகளிலஉள்ளவற்றை அச்சிட்டு வெளியிட உதவுவது. இவை அவர்களின் மொழி இலக்கிய உணர்வையும், மொழிக் கல்வி உணர்வையும் புலப்படுத்துகின்றன. ஆனாலும் இவை செயலாக உருப்பெறவில்லை.

பாண்டித்துரைத் தேவர் ஆளுமை

மதுரைத் தமிழ்ச்சங்கம் பாண்டித்துரைத்தேவரின் (21.3.1867-2.12.1911) சொந்த முயற்சியால் துவங்கப்பட்டு அவரே நிறுவனத் தலைவராக இறக்கும் வரையில் இருந்து நிருவகித்ததால் அவரைப்பற்றித் தெரிந்துகொள்வது சங்கம் பற்றிய சில உண்மைகளைத் தெளிவுபடுத்தும்.

பழைய இராமநாதபுரம் மாவட்டம் அதை ஒட்டிய சில பகுதிகள் சேதுநாடு என்று அழைக்கப்படும். அதை ஆண்ட மன்னர்கள் சேதுபதி என்று அழைக்கப்பட்டார்கள். சேதுபதிகளும் ஆங்கில ஆட்சிக்கு

உட்பட்ட குறுநில மன்னர்கள். சேதுபதிகளில் முத்துராமலிங்க சேதுபதி (1862 - 73) ஒருவர். அவருடைய தமையனார் பொன்னுச்சாமித் தேவர் (1870) சேது சமஸ்தானத்தின் அமைச்சராக இருந்து திறம்படப் பணியாற்றினார்.

பொன்னுசாமித் தேவர் தமிழில் புலமை உடையவர். பல தமிழ்ப் புலவர்களை அவைப்புலவர்களாக அமர்த்தி ஆதரித்தவர். வெளியுலகத் தொடர்பும் உடையவர். சமய சமூக மறுமலர்ச்சி இயக்கங்களிலும் ஈடுபாடு கொண்டவர். பிரம்ம சமாஜத்தின் சென்னை கிளை 1864-இல் ஆரம்பிக்கப்பட்ட போது ஏற்படுத்திய தத்துவபோதினி என்ற பத்திரிகைக்காக ஆயிரம் ரூபாய் அளித்தவர். ஆறுமுக நாவலருக்குத் திருக்கோவையார், பரிமேழலகர் உரை போன்ற இலக்கிய நூல்களையும், இலக்கணக் கொத்து போன்ற இலக்கண நூல்களையும் பதிப்பிப்பதற்கு இவர் பொருள் உதவியும் செய்தவர். அதனால் நாவலர், திருக்கோவையார் பதிப்பு முன்னுரையில்,

"முற்காலத்தில் பாண்டியர்களைப்போல இக்காலத்தில் இப்பிரபு (பொன்னுசாமித் தேவர்) அவர்கள் தமிழை வளர்ப்பார்கள் என்று உறுதியாகக் கருதியிருக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பொன்னுசாமித் தேவர் வைத்திய நூல் ஒன்றும் தமிழில் வெளியிட உதவி செய்துள்ளார். இவருடைய பணிகளைப் பாராட்டிய முத்துராமலிங்க சேதுபதி இராமநாதபுரம் சீமைக்குள் பாலவனத்தம் ஜமீந்தார் ஆகப் பொன்னுசாமித் தேவரை ஆக்கினார்.

பொன்னுசாமித் தேவரின் மகனான பாண்டித்துரைத் தேவரும், தமிழும் ஆங்கிலமும் படித்தவர். இசையிலும் நல்ல புலமை உடையவர். தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கும் முன்னரே உ.வே. சாமிநாத ஐயருக்கு மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களைப் பதிப்பிக்கப் பொருள் உதவி செய்தவர்.

இலக்கியச் சொற்பொழிவு ஆற்றும் திறன் உடையவர். நாட்டு அரசியலிலும் ஈடுபாடு உடையவர். அதனால் தான் 1901-ஆம் ஆண்டு மே மாதம் மதுரையில் நடைபெற்ற சென்னை மாகாண

அரசியல் மாநாட்டுக்கு வரவேற்புக்குழுத் தலைவராகப் பணியாற்றியவர். அப்படியே பின்னால் 1905-இல் வ.உ.சிதம்பரனார் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி ஆரம்பித்தபோது தமிழ்ச்சங்கம் சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் பங்காகக் கொடுத்தவர்.

இவர் காலத்தில் இவருடைய சித்தப்பாவின் பிள்ளையான பாஸ்கரரே சேதுபதியாக ஆண்டுவந்தார். அவருக்கும் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தது என்பது இவருடைய தனி உதவியாளர், உ.வே.சா அவர்களுக்கு எழுதிய கடிதத்தாலும் (11-9-1892) நாட்குறிப்பாலும் (13-1-1893) அறிய முடிகிறது.

இந்தச் சூழலிலே பாண்டித்துரைத்தேவர் அரசியல் மாநாட்டில் இறுதிநாளில்தான் சங்கம் ஆரம்பிக்கும் எண்ணத்தை வந்திருந்தவர்களுக்கும் மதுரைப் பொதுமக்களுக்கும் தெரிவித்து சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து சங்கம் ஆரம்பிப்பதற்கான தன்னுடைய திட்டத்தைத் தெரியப்படுத்தினார்.

பின்னர் 14-9-1901 அன்று மதுரைத் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்க முடிவு கட்டி அறிஞர் பலருக்கும் கடிதம் எழுதி பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தினார்.

மதுரைத் தமிழ்ச்சங்கத் தொடக்கம்

திட்டமிட்டபடியே 14-9-1901 அன்று பகல் 1-30 மணிக்கு மேல் 2-45 மணிக்குள் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது. இதற்கு முகவை மன்னர் பாஸ்கர சேதுபதியும் ஒன்பது தமிழ் அறிஞர்களும் வந்திருந்தனர். இவர்களில் சென்னையைச் சார்ந்தவர் இருவர்; தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர் ஒருவர்; ஏனையோர் மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அப்படியே பிராமணர் ஏழுபேர்; பிள்ளை இரண்டு பேர் என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

மொழி வளர்ச்சிக்குத் தேவர்கண்ட அமைப்புகள்

சங்கத்தின் நோக்கம் 'மொழிவளர்ச்சி' என்று உ.வே.சா அவர்களுக்கு பாண்டித்துரைத் தேவர் எழுதிய கடிதத்தால் அறியலாம். அதனால்தான் அதேநாளில் சேதுபதி **செந்தமிழ்க்கலாசாலை,** பாண்டியன் புத்தகசாலை, **நூலாராய்ச்சி சாலை** என்று மூன்று அமைக்கப்பட்டு மூன்று நாள் விழா நடைபெற்றது. கலாசாலைக்குத் திரு.நாராயண ஐயங்கார் தலைமை ஆசிரியராகவும் ஆராய்ச்சி சாலைக்கு இரா.இராகவ ஐயங்கார் தலைவராகவும் உடனே நியமிக்கப்பட்டார்கள்.

24-7-1902 அன்று தமிழ்ச்சங்க **முத்திராசாலை** என்ற அச்சகம் நிறுவப்பட்டது. 7-12-1902 அன்று **செந்தமிழ்** என்ற மாத இதழ் தொடங்கப்பட்டது.

பொதுவாக விவேகபானு என்ற இதழ் விவரப்படி(1902) சங்கம் நான்கு அமைப்புகள் கொண்டதாகக் கருதப்பட்டது என்று தெரிய வருகிறது. (வீ.காந்திமதி, 1987:8)

1. செந்தமிழ்க் கலாசாலை: இதன் மூலம் மாணவர்களுக்கு உண்டி, உடை, உறையுள் கொடுத்துச் செந்தமிழ்க் கல்வி கற்பிக்கப்பட்டது.
2. பாண்டியன் புத்தகசாலை: யாவரும் வந்து படித்தற்குரிய வகையில் தமிழ் வடமொழி நூல்கள் தொகுத்து வைக்கப்பட்டன.
3. தமிழ்ச்சங்க முத்திராசாலை: இதுவரை வெளிவராத நூல்களை அச்சில் கொணர்வதற்காக நிறுவப்பட்டது.
4. 'செந்தமிழ்' இதழ்: அறிஞர்கள் விரும்பிப்படிக்கும் ஆராய்ச்சி இதழ்.

பாண்டித்துரைத்தேவரின் பார்வையின் ஆழமும் சமூகஉணர்வும்:

இங்கு இரண்டு செய்திகள் சுட்டிக்காட்டத் தகுந்தவை: 1) சங்கம் தொடங்கிய அன்று நூலாராய்ச்சி சாலை ஒன்று

அமைக்கப்பட்டது அல்லவா? அதன் தலைவராக இருந்த இரா.இராகவ ஐயங்காரே 7-12-1902 அன்று 'செந்தமிழ்' இதழ் தொடங்கப் பட்டபோது அதன் ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார். நூலாராய்ச்சி சாலை பற்றிய வேறு எந்த விவரமும் கிடைக்காததால் அதுவே செந்தமிழ் இதழாக மாற்றம் பெற்றது என்று கொள்ளலாமா?
2) இந்த உறுப்புகள் - துணை நிறுவனங்கள் காட்டும் தனித்துவமும் சமூக உணர்வும் குறிப்பிடத்தகுந்தவை. தனித்துவமாக கல்லூரி, அச்சகம், செந்தமிழ் ஆகிய மூன்றும் குறிப்பிடலாம். சான்றாக 19-ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட மொழிச்சங்கங்கள் நேரடியாகத் தமிழ் வளர்ச்சியில் ஈடுபடும் திட்டம் எதுவும் வைத்திருக்கவில்லை. எனவே இவை பாண்டித்துரைத் தேவரின் பார்வையின் ஆழத்தைப் புலப்படுத்துகின்றன. இந்தத் துணை நிறுவனங்கள் அவரின் சமூக உணர்வையும் புலப்படுத்துகின்றன. செந்தமிழ்க் கலாசாலை மூலம் தமிழ்க்கல்வியைப் பரப்புவதற்கான புதிய தலைமுறையை உருவாக்க முன்வந்தார். இதைச் சமூக நோக்கில் கூறினால் தமிழ் அறிஞர்களைக் கொண்டு (மேல்மட்டத்தார் என்று பொதுமைப் படுத்தலாம்) ஆய்வு, மொழிவளர்ச்சி என்ற முயற்சிகளில் ஈடுபடாமல் அது எப்பொழுதும் தொடர, புதிய தலைமுறை உருவாக்குவதில் (அடிமட்டத்தாரை - மேல்மட்டத்தார் ஆக்குவது) அவருடைய சமூக உணர்வின் வெளிப்பாடாகக் கொள்ளலாம். அதனால்தான் அறிஞர்களுக்குப் பொருள் கொடுத்து உதவியது போலவே மாணவர்களுக்கு உணவு, உடை, உறையுள் படிக்கும் நூல்கள் கொடுத்து உதவியுள்ளார். இதுவே பாண்டித்துரைத்தேவர் மானிட சமூகத்தின் அடிப்படைத் தன்மையைப் புரிந்தவர் என்பதைப் புலப்படுத்துகிறது. மேலும் தமிழ்க்கல்வி முதன்முதலாக நிறுவனப்படுத்தப்பட்டது.

செந்தமிழ் இதழ் மூலம் தமிழ் ஆராய்ச்சி நிறுவனப்படுத்தப்பட்டது. புற உலகில் ஏற்பட்ட இயந்திர தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அறிஞர்களிடையே கருத்துப் பரிமாற்றமும் ஆராய்ச்சி உணர்வும் எழுவதற்கு உதவியது. அப்படியே அச்சகம் ஒன்று நிறுவிச் சங்கப் பிரசுரமாகவும் செந்தமிழ் வெளியிட்டவற்றைச்

செந்தமிழ்ப் பிரசுரமாகவும் நூல்கள் வெளியிட்டது, புதியதுறை வளர்ச்சிக்கு வழிகோலியது.

பொதுவாகக் கல்லூரி, நூலகம், அச்சகம், மாத இதழ் ஆகியவை ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்குத் தேவையான அமைப்புகள் ஆகும். 'இந்து' ஆங்கில நாளேடு சங்கத்தின் தொடக்க விழாவைக் குறிப்பிடும் போது (செப்டம்பர் 1901) காசியில் செயல்படும் இந்துக் கல்லூரியின் அமைப்பு மற்றும் அதன் செயற்பாடுகளின் முன்னோடியாகத் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது இதனை உறுதிப்படுத்துகிறது.

நிருவாகம்

சங்கத்துக்கும் துணை நிருவனங்களுக்கும் இடையே நிருவாக முறையில் உள்ள தொடர்பு என்ன? அவைகளின் நிருவாகம் எப்படி செயல்பட்டன என்று அறிவது சங்கத்தின் செயல் திறனையும் சங்கம் அமைத்தவரின் மனப்போக்கையும் அறிந்து கொள்ள உதவும்.

சங்க நிருவாகக் குழு

சங்கத்துக்கு ஒரு தனி நிருவாகக் குழு அமைக்கப்பட்டது. அதில் தலைவர், இரண்டு செயலர், மற்றும் எட்டு உறுப்பினர்கள் இருந்தார்கள். நிறுவனத் தலைவராகப் பாண்டித்துரைதேவர் இருந்ததால் அவர் இறக்கும் வரையிலும் தலைவராக இருக்க வேண்டும் என்றும், தலைவரே சங்கத்துக்கு முழுப் பொறுப்பு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே பாண்டித்துரைத் தேவர் தான் இறக்கும் வரையிலும் தலைவராகச் செயல் ஆற்றினார்.

முதல் நிருவாகக் குழுவில் தலைவரைத் தவிர ஏனையோரின் சமூகப் பின்னணி வருமாறு: பிராமணர் - நால்வர்; பிள்ளை - ஒருவர்; முதலியார் - ஒருவர்; முஸ்லீம் - ஒருவர்; நாயக்கர் - ஒருவர்; இருவருடைய சாதி தெரியவில்லை. 1911-ஆம் ஆண்டில் துணைத்தலைவர் பதவி பாண்டித்துரைத் தேவர் இறப்பதற்கு முன்னரே உண்டாக்கப்பட்டது.

வித்துவக் கழகம்

பாண்டித்துரைத்தேவர் கல்லூரி, மாத இதழ் ஆகியவற்றைச் சரியாக நடத்த அறிஞர்கள் குழு ஒன்று வேண்டும் என்று சங்கத்தைத் திட்டமிட்ட காலத்திலேயே எண்ணியிருந்தார் என்பது அவர் உ.வே.சா அவர்களுக்கு 2-9-1901 அன்று எழுதிய கடிதத்தால் அறியலாம்.

"தமிழ் அபிமானிகளாகிய தாங்கள் இச்சங்கத்தின் தமிழ்வித்துவக்கழகத்தில் ஒருவராக இருந்து பாஷா அபிவிருத்திக்காய உதவிகளைப் புரிந்து ஆதரித்துத் தங்கள் சம்மதத்தை அளிக்க மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்பது உ.வே.சா. அவர்களுக்கு எழுதிய கடித வாசகம். இதனால் தான் உ.வே.சா. அவர்கள் 14-9-1901 அன்று தமிழ்ச்சங்கம் மதுரையில் தொடங்கப்பட்டபோது கலந்துகொண்டார். ஆனாலும் வித்துவக்கழகம் 21-12-1903 அன்றுதான் தொடங்கப்பட்டது. அப்பொழுது சங்க உறுப்பினர்கள் எல்லாரும் வித்துவக்கழகத்தின் உறுப்பினர்களாகக் கருதப்பட்டார்கள்.

21-12-1903 அன்று நடந்த கூட்டத்தில் பத்தொன்பது தமிழ் அறிஞர்களே கலந்துகொண்டார்கள். உ.வே.சா. உட்பட பதின்மூன்று அறிஞர்கள் வர இயலவில்லை என்று தெரிவித்துவிட்டார்கள். வந்திருந்தவர்களில் பிராமணர் - எட்டுப்பேர்; கவிராயர் - நால்வர்; முதலியார் - மூவர்; பிள்ளை - மூவர்; பாண்டித்துரைத்தேவரே இதற்கும் தலைமை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில் சங்க உறுப்பினர் ஆவதற்குரிய தகுதி விதிமுறை; செந்தமிழில் கட்டுரை வெளியிடும் முறை (அதாவது இரண்டு அறிஞர்கள் படித்துப்பார்த்து ஒப்புதல் அளித்த பிறகே வெளியிடுவது). அதில் வெளியிடப்படும் பிறசெய்திகள் என்னென்ன என்று விபரம்; கல்லூரிக்குரிய பாடத்திட்டம்; தேர்வுத் திட்டம் ஆகியவை பற்றியெல்லாம் இருபத்திரெண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எனவே, தமிழ்ச்சங்கத்தின் அறிவுசார் பணியைத் திட்டமிடவும் பணிக்கு வழிகாட்டவும் வித்துவக்கழகம் உதவிசெய்தது எனலாம்.

வித்துவக் கழகத்தின் இரண்டாவது கூட்டம், சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழாவின்போது 25-5-1904 அன்று நடைபெற்றது. அதில் தமிழுக்குச் சிறந்த அகராதி இல்லாததால் அந்த அகராதிப் பணியைச் சங்கத்தாரே ஏற்றுக்கொள்வது என்றும் அகராதிப் பணி தொடங்குமுன்னர் பல தமிழ் நூல்களையும் ஆராய்ந்து அரும்பதங்களை இடம் காட்டித் தொகுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவுசெய்து, யார் யார் எந்தெந்த நூல்களை எடுத்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. பாண்டித்துரைத்தேவரே பெரிய புராணத்திலிருந்து அருஞ்சொற்களைத் தொகுத்துத் தருவதாக ஒத்துக்கொண்டார்கள் என்பது சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது. ஏனைய அறிஞர்களில் பிராமணர் - ஏழு பேர்; பிள்ளை - மூவர்; முதலியார் - நால்வர்; கவிராயர்- இருவர்; செட்டியார் - இருவர்; ஆகமொத்தம் பதினெட்டு அறிஞர்கள் கலந்து கொண்டார்கள்.

இது உண்மையில் சங்கத்தின் பொதுநோக்கமாகிய மொழி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அடங்கும். இந்தத் திட்டம் முற்றுப் பெறாமல் இலங்கை கு.கதிரவேற்பிள்ளை எழுதிவைத்திருந்த அகராதியை 1913-ஆம் ஆண்டிலிருந்து பகுதியாக அச்சிட்டு வெளியிட்டது.

காரிய நிர்வாக சபை

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பணிகளில் ஒன்றாகத் தமிழகப் பள்ளி-கல்லூரி மாணவர்களிடையே தமிழ் அறிவு வளர ஊக்குவிக்கும் பொருட்டு, ஆங்கிலத் தமிழ்த்தேர்வு என்பதும் வேறுசிலர் தமிழில் புலமை பெறுவதற்கும் ஏனைத் தமிழ்த்தேர்வு என்பதும் நடத்துவதற்குத் திட்டம் இட்டார்கள். இந்தத் தேர்வுகளைக் கல்லூரி நடத்தாமல் சங்கமே நடத்தியதால் இதைச் சங்கத் தேர்வுகள் என்று குறிப்பிடுகிறார்கள். எனவே சங்கத்தேர்வுகளை நடத்த 'காரிய நிர்வாக சபை' ஒன்றும் அமைக்கப்பட்டது.

20-12-1902லிருந்து தேர்வுகள் நடத்தப்பட்டன. ஆனால் காரிய நிர்வாக சபை என்பது இரண்டாம் ஆண்டு விழாவின் போதே 25-5-1904 அன்று அமைக்கப்பட்டது. இதில் பாண்டித்துரைத்தேவர் உட்பட ஐந்துபேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதே ஆண்டில் ஒன்பது

உறுப்பினர்கள் கொண்ட சபையாக மாற்றப்பட்டது. 1904-ஆம் ஆண்டிற்குப் பிறகு காரிய நிர்வாகசபை உறுப்பினர்களைப் பற்றிய செய்திகள் தெரியவில்லை.

எனவே, சங்கத்தின் நிர்வாகக்குழு மட்டும் அல்லாமல் கல்லூரியை நடத்துவதற்கு வித்துவக்கழகமும் தமிழ்க்கல்வியைப் பரப்புவதற்குத் தேர்வுகளை நடத்தக் காரிய நிருவாகசபை என்று இரண்டு உட்குழுக்களும் செயல்பட்டன. இவை, செயல் திட்டத்துக்கு ஏற்பச் செயல்குழு அமைத்து இதை இன்னார் செய்வது என்று வரையறுப்பது; இது வேலைப் பங்கீட்டு முறை. இவை நிருவாகச் சிறப்பைக் காட்டும்; இந்தப் பெருமையும் பாண்டித்துரைத் தேவருக்கே உரியது.

மதுரைத் தமிழ்ச்சங்கம் 16-10-1908 அன்று இலக்கியம் மற்றும் அறநிலைய அமைப்புகளின் 1860-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இந்தப் பதிவு ஆவணத்தைக் கவனமாகப் படிக்கும் போது இரண்டு மாற்றங்களைக் கவனிக்க முடிகிறது. ஒன்று, ஆவணத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கம் தோன்றிய நாளாக - சங்கம் தொடங்கும் திட்டத்தை அறிவித்த நாளான 25-5-1901 அன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.இந்த முரண்பாட்டை மட்டுமே வீ.காந்திமதி (1987 :13) சுட்டிக்காட்டியுள்ளார். இரண்டு, சங்கத்தின் குறிக்கோள்களை முன்னிறுத்துவதில் மாற்றமும் குறிக்கோளின் எண்ணிக்கையில் மாற்றமும் காணப்படுவது. ஆவணத்தில் பத்து குறிக்கோள்கள் குறிக்கப்பட்டுள்ளன. சங்கம் தொடங்கியபோது ஐந்து (கலாசாலை, நூலகம், செந்தமிழ் அச்சகம், நூல்வெளியீடு, தேர்வு) இருந்ததாகக் குறிப்பிடலாம், அந்தப் பத்தில் ஒன்று மட்டும் (எட்டாம் குறிக்கோள்) நிதி தொடர்பானது, ஏனையவை கல்வித் தொடர்பானவை.

குறிக்கோள்களைமுன்னிறுத்துவதில்மாற்றம்

1) கல்லூரி ஏற்படுத்துவது 1901-இல் முதலாவதாகக் கருதப்பட்டது. 1908-இல் ஒன்பதாவதாக மாறியது. 2) நூலகம் வைத்தல் இரண்டாவதிலிருந்து ஏழாவதாக மாறியது.

இந்த இரண்டும் முக்கியமானது. புதிதாகச் சேர்க்கப்பட்டது முழுப்புதுமையானது ஒன்றும் இல்லை. (அ) 1902-ஆம் ஆண்டு தமிழ்த்தேர்வு செந்தமிழ் கலாசாலையில் படிக்காதவர்களுக்கும் நடத்தப்பட்டு வந்தது. இப்பொழுது புதிய குறிக்கோளாக இரண்டாவது இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. (ஆ) செந்தமிழ் இதழின் ஒரு குறிக்கோளாக இருந்த மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியிடுவது தனிக் குறிக்கோளாக ஐந்தாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. (இ) அப்படியே முன்னரே அச்சிடப்பட்ட நூலின் திருந்திய பதிப்பு கொண்டு வருவது (6-ஆம் குறிக்கோள்) என்பதும் செந்தமிழின் குறிக்கோள்களில் ஒன்றாகச் சொல்லலாம். (ஈ) i) முதல் குறிக்கோள் சங்கத்தின் பொது குறிக்கோள் - மொழி வளர்ச்சியைத் தூண்டுதலும் இலக்கியத்தை மேம்படுத்தலும் ஆகும். ii) வித்துவக் கழகத்தின் 1902-இல் நிறைவேற்றிய தீர்மானம் இங்கு 10-ஆம் இடத்தைப் பெற்றுவிட்டது. எனவே குறிக்கோள்களின் எண்ணிக்கை கூடியிருந்தாலும். புதுமையாக எதுவும் இல்லாததால் குறிக்கோள்களை முன்னிறுத்துவதில் ஏற்பட்ட மாற்றத்துக்கான காரணங்களை மட்டும் பார்ப்போம்.

முதலாவதாக இருந்த செந்தமிழ்க் கல்லூரி நடத்துவது ‘நிதி நிலைமைக்கேற்பக் கல்லூரி நடத்துவது’ என்று நியதித்தொடர் (ConditionalClause) சேர்க்கப்பட்டு ஒன்பதாவதாக மாற்றப்பட்டுள்ளது. எனவே இந்த மாற்றங்களுக்குக் காரணம் நிதிநிலைமை என்று தெளிவாகிவிடுகிறது. ஆனால் கல்லூரியைப் பொறுத்தவரையில் இன்னொரு காரணமும் இருக்கலாமோ என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. அதை முதலில் பார்ப்போம்.

செந்தமிழ்க் கலா சாலை மாணவர்களுக்கு இலவச உணவு, உடை, உறையுள் கொடுக்கப்பட்டு வந்தது. இருந்தாலும் மாணவர் தொகை குறைவாக இருந்திருக்கவேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஏனென்றால் 1911-ஆம் ஆண்டு கணக்குப்படி கலாசாலையில் கல்வி கற்றோர் பதினேழுபேர்; அவர்களுள் மூன்று பேரே உணவுக்காகப் பணம் கட்டிப் படித்தார்கள். எனவே இங்கு இரண்டு உண்மைகள் புலனாகின்றன.

1) பெரும்பான்மையானவர்களுக்கு (82 விழுக்காடு) எல்லாச் செலவையும் ஏற்க வேண்டி இருப்பது; 2) அப்படி இருந்தும் படிப்பவர்கள் எண்ணிக்கை குறைவு என்பதை அறியலாம். அதாவது பொது மக்களிடம் தமிழ்க் கல்விக்கு நல்ல ஆதரவு இல்லை. மேலும் படித்த மாணவர்களும் முழுக் கல்வியும் - நான்கு ஆண்டு கல்வியும் - பெறாமல் ஒன்று அல்லது இரண்டு வகுப்பு படித்தவுடனேயே கிடைத்த வேலைக்குப் போய்விட்டார்கள். (ஒரு தமிழ் நண்பன், 1913:309) எனவே, நான்கு ஆண்டு படிப்பை முழுதும் முடித்தவர் வெகு சிலரே. பொருள் அதிகம் செலவு செய்ய வேண்டியிருந்தும் படிக்கவந்த மாணவர்களின் ஆதரவு குறைவே. சங்கத்தார் குறிக்கோள்களை முன்னிறுத்துவதில் மாற்றம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது போலும்.

புதிய குறிக்கோள்களில் 3 (தமிழ் இலக்கிய இலக்கணங்களில் அட்டவணை, அவற்றின் தோற்றம் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்துவது), 5 (தமிழை வளப்படுத்த முதலில் வடமொழி, ஆங்கிலம் என்ற இரண்டு தவிர 'பிறமொழிகள்' என்று புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது), 6 (தமிழ் நூல்களின் சரியான, தெளிவான பதிப்புகளை வெளியிடுவது) ஆகிய மூன்றும் ஆராய்ச்சிப் பணிகளையும் மொழிவளர்ச்சிப் பணிகளையும் அடிப்படையாகக் கொண்டவை. 7 (மதுரையில் மட்டும் அமைக்கப்பட்ட நூல் நிலையம் பிற ஊர்களிலும் ஏற்படுத்துவது), 10 (பல மையங்களில் நிறுவப்படும் கிளைச் சங்கங்கள் உட்பட மேலே கூறிய குறிக்கோளைப் பெறுவதற்குத் தேவையானவற்றைச் செய்வது) ஆகியவை தமிழ்ச்சங்க நடவடிக்கைகளைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டவை; என்றாலும் வேறு இடங்களில் நூல்நிலையம் ஏற்படுத்தப்பட்டதாகவோ அல்லது புதிய கிளைச் சங்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ தெரியவில்லை. ஆனாலும் சங்கத் தேர்வுகள் 1902-ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டுவந்தாலும் அவைகளைப் பிரபலப்படுத்த பல இடங்களிலும் நடத்தப்பட்டன. 1906-ஆம் ஆண்டு தனித் தமிழ்த்தேர்வு பதினோறு இடங்களிலும் 1911,1912-ஆம் ஆண்டுகளில் பதினைந்து இடங்களிலும் குறிப்பாக இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் திருவனந்தபுரத்திலும் நடத்தப்பட்டன. இங்கு மக்கள் ஆதரவும்

பரவலாக இருந்தது; சங்கத்துக்கு வருவாயும் தந்தது. இதனாலேயே இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இரண்டாவது குறிக்கோளாக அமைக்கப்பட்டது போலும். சங்கத்தின் நடவடிக்கைகளில் இன்னொரு முக்கியமான அம்சம் ஆண்டுவிழா. இது 1903-ஆம் ஆண்டு முதல் மே மாதம் 24-26 ஆகிய மூன்று நாள்களிலும் நடத்தப்பட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இங்கு, 1910-ஆம் ஆண்டு தஞ்சையில் நடத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

இவையெல்லாம் புலப்படுத்தும் உண்மைகள் யாவை? நிறுவனர் காலத்திலேயே கூடக் காலச்சூழலையும், மக்கள் ஆதரவையும் ஒட்டிக் குறிக்கோள்களின் எண்ணிக்கையிலும் அவைகளை முன்னிறுத்துவதிலும் நிருவாகத்திலும் மாற்றம் ஏற்பட்டுவிட்டன என்பதும் அவை தவிர்க்க முடியாதவை என்பதும் ஆகும்.

இந்த அமைப்புகளையும் அவைகளுக்காக நிருவாகக் குழுக்களையும் அமைத்துக் காலத்துக்கு ஏற்ற மாற்றங்களையும் செய்ததில் சங்கத்தின் தலைவரான பாண்டித்துரைத் தேவரின் பங்கு பெரியது. அவர் தலைவராக இருந்ததோடு எப்படியெல்லாம் சங்கப்பணிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவினார்; சங்கத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றினார் என்று பார்ப்போம்.

பாண்டித்துரைத் தேவர்

பாண்டித்துரைத்தேவர் சங்கப்பணிகள் நடைபெறத் தேவையான நிதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்று அறிய முடியவில்லை. ஆனாலும் தான், மதுரையில் வைத்திருந்த வெற்றுநிலத்தை (உடனே கட்டடப்பணியைத் தொடங்க முடியாமல் போனதால், அரசு, சங்கத்துக்குப் பணம் கொடுத்து நிலத்தை வாங்கித் தலைமை அஞ்சலகம் கட்டிவிட்டது.) அந்தப் பணத்தைக் கொடுத்ததோடு தான் மதுரையில் தங்குவதற்காக இருந்த சொந்த மாளிகையைச் செந்தமிழ்க் கலாசாலைக்காகஅளித்துவிட்டார்.

அன்றைய சேதுபதி பாஸ்கரர் அவருடைய சித்தப்பா மகன் ஆனதாலும் இரண்டுபேரும் நண்பர்களாகப் பழகியதாலும் பாஸ்கர சேதுபதி தமிழ்ச்சங்கத் தொடக்கவிழாவில் கலந்து கொண்டு மாதம் அறு நூற்று ஐம்பது ரூபாய் சங்கத்திற்குக் கொடுப்பதாக உறுதி செய்ததோடு புதுக்கோட்டை சமஸ்தானத்தையும் சங்கத்துக்கு நிதி உதவி அளிக்கும் படி செய்தார்.

பாண்டித்துரைத்தேவர் வேண்டுகோளுக்கு இணங்கவே திருவனந்தபுரம், கொச்சி, மைசூர், துர்பங்கா, பரோடா ஆகிய சமஸ்தான மன்னர்கள் சங்கத்துக்கு நன்கொடை அளித்தார்கள். பொது நிறுவனத்தின் வளமை அதன் நிதிவளமையைப் பொறுத்தது; அதை உணர்ந்து பல வழிகளிலும் பாண்டித்துரைத்தேவர் நன்கொடை பெற்றது சங்கநடவடிக்கையில் அவர் கொண்ட ஈடுபாட்டைக்காட்டும்.

செந்தமிழ்க் கலாசாலையைத் தமிழகத்தின் முதல் தமிழ்ப் பாடசாலையாக அமைத்து நல்ல அறிஞர்களை ஆசிரியர்களாக அமர்த்தித் திறம்பட நடத்தினார். தமிழ் அறிவை மாணவர்கள் இடையே வளர்க்க நாடுமுழுவதும் பல இடங்களில் தனித் தமிழ்த் தேர்வும் பள்ளி - கல்லூரி மாணவர்களின் தமிழ்ப் பாடத்திட்டத்தை ஒட்டிய தேர்வும் (ஆங்கில தமிழ்த் தேர்வு) நடத்தித் தமிழ்க் கல்வியில் ஆர்வத்தை நாடு முழுவதும் பரப்பினார். செந்தமிழ் இதழை மாதாமாதம் வெளிக்கொணர்ந்ததன் மூலம் தமிழ் ஆராய்ச்சி வளர வழிவகுத்தார்.

அச்சகம் அமைத்ததன் மூலம் செந்தமிழ் ஒழுங்காக வெளியிடப்பட்டதோடு தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் - புதியநூல்கள் - இதுவரை வெளியிட்ட இருபது நூல்களில் (இவைகளில் பதினேழும், பத்தொன்பதும் முன்னைய பதிப்புகளின் தொகுப்பே; அப்படியானால் மொத்தம் பதினேழு வெளியீடுகள்தான்) ஒன்பதும் செந்தமிழ் பிரசுரங்கள்; அதாவது செந்தமிழில் முதலில் வெளியிடப்பட்டு பின்னர் நூலாக்கப்பட்டவை. 71இல் 312 மட்டும் இவர்காலத்தில் வெளியிடப்பட்டன என்றால் ஆராய்ச்சியில் அவர்காட்டிய ஊக்கம் புலப்படும்.

இங்கு அபிதான சிந்தாமணி என்ற முதல் இலக்கியக் கலைக் களஞ்சியத்தைத் தமிழ்ச்சங்கம் இவர் காலத்திலேயே வெளி இட்டது சிறப்பான பணி ஆகும். அதில் அவர் காட்டிய அக்கறை பற்றிய அந்த நூலாசிரியர் குறிப்பிடுவதாவது.

> அறிக்கைப்பத்திரிகையோ.... அறிக்கையோ பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்களின் கைப்பட்டு தாமே சென்னைக்கு வந்து நான் எழுதிய நூலைக் கண்டு களித்து .. மதுரைக்கு எடுத்துச் சென்று அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தையும் பலரையும் கொண்டு எழுதுவித்து... அச்சிட... பொருள் உதவி செய்தனர்.

என்ற ஆ.சிங்காரவேலு முதலியாரின் முகவுரை வாசகம் நல்ல நூல்களை வெளியிடுவதில் பாண்டித்துரைத்தேவர் கொண்டு இருந்த ஆர்வத்தையும் செயல்முறையையும் புலப்படுத்தும்.

இவருடைய தனிச்சிறப்பு இவரே சில நூல்களை எழுதி வெளியிட்டது ஆகும். இலக்கிய நூல்களும் (திருக்குறள், கம்பராமாயணம் பற்றியது) பல கட்டுரைகளும் எழுதியுள்ளார். இரண்டு கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவை. ஒன்று இந்திய வீரமாதர் (செந்தமிழ் - தொகுதி) பற்றியது. இது இந்தியாவின் பிற பகுதியைத் தெரிந்து தமிழ் மக்களுக்கு அறிவிக்கும் கட்டுரை. அவருடைய பரந்த நோக்கை வெளிப்படுத்துகிறது. இன்னொன்று, தமிழ் பழஞ்சரிதம் என்ற கட்டுரைத்தொடர் (செந்தமிழ் தொகுதிகள் 6,7) மொழியியல் அறிவின் அவசியத்தை வலியுறுத்துவது அவருடைய புதுமையாக்க உணர்வின் வெளிப்பாடு ஆகும்.

'நம் மொழியின் மிகப்பழைய காலத்துச் சரித்திரம் அறிய வேண்டின் நவீன சாத்திரமாகிய பாஷா தத்துவநூல் முறை அதற்குரிய கருவிகளில் சிறந்தது ஒன்றேயாம்' என்பது அவரது வாசகம். இது தமிழ் வளர்ச்சி மட்டும் அல்லாமல் தமிழின் பழைய பெருமையை வெளிக்கொண்டு வர வேண்டும் என்ற ஆர்வத்தையும் புலப்படுத்துகிறது.

தமிழ்ச்சங்கம் வெளிநாட்டாரின் - குறிப்பாக வெளிநாட்டுத் தமிழ்அறிஞர்களின் கவனத்தையும் இழுத்திருக்கிறது. 1904-5-ஆம்

ஆண்டுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாட்டுத் தமிழ் அறிஞர்களும் 1906, 1909 ஆண்டுகளில் இலங்கையிலிருந்தும் அறிஞர்களும் தமிழ்ச் சங்கத்துக்கு வருகை புரிந்து அதன் நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ளார்கள்.

தமிழ்மொழிக்காகத் தொடங்கிய முதற்போரும் பாண்டித்துரைத்தேவரும்

1904-ஆம் ஆண்டு வாக்கில் - அதாவது கர்சன் வைசிராயாய் இருந்த காலத்து வடமொழி வாணர்களின் தூண்டுதலால் பல்கலைக் கழகங்களில் செம்மொழிகள் (Classical languages) கற்பித்தால் போதுமானது; வட்டார மொழிகள் (அதாவது மாநிலமொழிகள்) கற்பிக்கவேண்டியதில்லை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அதனால் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்விக்கு ஆபத்து நேர்ந்ததைப் எம்.எஸ்.பூரணலிங்கம் பிள்ளை, வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி ஆகியோர் தடுக்கமுயன்றதோடு தமிழ்ச்சங்கத்திடம் தெரிவித்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றும்படி செய்தார்கள். பாண்டித்துரைத்தேவர் நேரே சென்று உரியவர்களைச் சந்தித்து அந்தத் திட்டத்தைக் கைவிடும்படி செய்தார். இது தமிழ்மொழியின் கல்விப் பாதுகாப்புச்சங்கம் பாண்டித்துரைத்தேவர் மூலம் செய்த தொண்டைக்காட்டும். சுருக்கமாகச் சொன்னால், பாண்டித்துரைத் தேவர் தம்முடைய செல்வாக்காலும், நிர்வாகத் திறமையாலும் தமிழ்ப் புலமையாலும் பிறதுறை அறிவாலும் தமிழ்ச் சங்கத்தையும் அதன் நிறுவனங்களையும் கட்டிக்காத்துத் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பல வகையிலும் பாடுபட்டார் என்பதும் மதுரைத் தமிழ்ச் சங்க வரலாற்றிலேயே அவருடைய தலைமைக் காலம் பொற்காலம் என்பதும் மறுக்கமுடியாத உண்மை ஆகும். அதே சமயத்தில் ஒருவரைப் பற்றியோ ஒரு நிறுவனம் பற்றியோ மதிப்பிடும் போது என்னென்ன செய்தார் என்று பார்ப்பதைப் போலவே என்னென்ன செய்திருக்கலாம், அவர் காலத்தில் பிறர் என்னென்ன எதிர்பார்த்தார்கள் என்று பார்ப்பதன் மூலமே முழுமதிப்பீடு செய்யமுடியும் என்ற பொது உண்மையையும் மறந்துவிடக் கூடாது. எனவே, செய்திருக்கக் கூடியவை என்ன என்று பார்ப்போம்.

தொடரும்....

சங்கச் செய்திகள்

08.01.2020 அன்று சோக்கோ அறக்கட்டளை இயக்குநர் பிரான்சிஸ் தலைமையில் 6.01.2020 முதல் 8.01.2020 வரை மூன்று நாட்கள் வீதி நாடகப் பயிற்சி அளிக்கப்பட்டது. நிறைவு நாள் விழாவில் முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா அவர்கள் தலைமை வகித்தார். தமிழக மக்கள் பண்பாட்டு கழகத் தலைவர் பாண்டியன் தன்னம்பிக்கை குறித்துப் பேசினார். பயிற்சி பெற்ற மாணவர்கள் மதுஒழிப்பு, சூழலைப் பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நாடகம் நடித்தனர். துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இளங்கலை முதலாமாண்டு மாணவர் மா.முனிச்செல்வம் வரவேற்புரையும் முதுகலை முதலாமாண்டு மாணவி ஆர்த்தி நன்றியுரையும் நல்கினர்.

13.01.2020 அன்று சங்க வளாகத்தில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரிச் செயலாளர் இராணி ந.லட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் விளக்கேற்றிப் பொங்கல் விழாவைத் தொடங்கி வைத்தனர். மாணவர்கள் பொங்கல் வைத்துக் கொண்டாடி சிறப்பு வழிபாடுகள் செய்து மகிழ்ந்தனர். அதனைத் தொடர்ந்து சிலம்பாட்டம் மற்றும் கும்மி போன்ற நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவில் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

23.01.2020 அன்று "மதுரை தமிழ்ச் சங்கத்து 'செந்தமிழ்' இதழ் நவீனத் தமிழ் ஆராய்ச்சியின் ஊற்றுக்கண்" என்னும் பொருண்மையில் உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தில் புலவர் பொ.வேலுச்சாமி அவர்கள் ஆற்றிய சிறப்புரை ஆற்றினார். கல்லூரி துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி, உதவிப் பேராசிரியர் முனைவர் அ.நந்தினி மற்றும் முதுகலை மாணவர்கள் பங்கேற்பாளர்களாகக் கலந்துகொண்டனர். நிகழ்வில்

பங்கேற்றவர்களுக்கு சங்கத்தின் சார்பில் செந்தமிழ் இதழ் வழங்கப்பட்டது.

21.01.2020 அன்று கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் 157ஆவது பிறந்தநாள் விழாப் போட்டிகள் நடைபெற்றன. பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, நாடகப்போட்டி ஆகியவை நடத்தப்பெற்றன. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 24.01.2020 அன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் விழாவில் பரிசளிக்கப்பட்டது. கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

26.01.2020 அன்று காலை சங்க வளாகத்தில் இந்தியத் திருநாட்டின் 71வது குடியரசுதினவிழா கல்லூரி தேசிய மாணவர் படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் தேசியக் கொடியேற்றிக் கொண்டாடப்பட்டது. செந்தமிழ் இதழின் பதிப்பாசிரியர் பேராசிரியர் இரா.சதாசிவம் அவர்கள் கொடியேற்றினார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி, சங்க ஆட்சிக்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், மேனாள் மற்றும் இந்நாள் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மதுரை மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தினவிழாக் கலைநிகழ்ச்சியில் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

30.1.2019 அன்று சங்க ஆட்சிக்குழு உறுப்பினர், முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, அன்னாருக்கு அவரது இல்லத்தில் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி, செந்தமிழ் இதழின் பதிப்பாசிரியர் பேராசிரியர் இரா.சதாசிவம், கல்லூரி முதல்வர், துணைமுதல்வர் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் பொன்னாடை போர்த்தி சங்கம் மற்றும் கல்லூரியின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மார்ச் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

கா.நமச்சிவாய முதலியார்
(மார்ச்.13)



அசோகமித்திரன்
(மார்ச்.23)

ந.மு. வேங்கடசாமி நாட்டார்
(மார்ச்.28)

தமிழ் ஒளி
(மார்ச்.29)

பதிப்பாசிரியர்: **பேராசிரியர் இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் தி.முருகரத்னம்

முனைவர் **இராம.சுந்தரம்**	முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **ம.திருமலை**	முனைவர் **மு.மணிவேல்**
முனைவர் **இ.மறைமலை**	முனைவர் **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் **செ.கந்தசாமி**	முனைவர் **இ.கி.ராமசாமி**
முனைவர் **பெ.சுயம்பு**	முனைவர் **உ.கருப்பத்தேவன்**

RNI Regd.No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1